### 151 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்கள் ஒப்படைப்பு!

# தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் அதிருப்தி அளிக்கிறது!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு!

சென்னை, ஆக 1 -

அனைத்திந்திய ஒதுக்கீட்டிற்கு (AIQ) நிரப்பப்படாத 151 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்களை ஒப்படைக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், இந்த வழக்கை தமிழ்நாடு த.வெ.க. அரசு கையாண்ட விதம் குறித்து தமிழ்நாடு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (TNMOA) அதிருப்தி தெரிவித்துள்ளது.

தனது உத்தரவில், சுகாதார சேவைகள் தலைமை இயக்குநரகம் (DGHS) இரண்டாம் சுற்று கலந்தாய்வு செயல்முறையை விரைவாக முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. கலந்தாய்வு அதே சதவிகிதத்தின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இரண்டாம் சுற்று கலந்தாய்வுக்குப் பிறகு, சதவிகிதத்தைக் குறைக்க முடிவு எடுக்கப்பட்டால், அத்தகைய இடங்களில் 50% தமிழ்நாட்டிற்குத் திருப்பி அளிக்கப்பட்டு, மீதமுள்ள 50% இடங்கள், புதுப்பிக்கப்பட்ட சதவிகிதத்தின் படி சுகாதார சேவைகள் தலைமை இயக்குநரகத்தால் நடத்தப்படும் அடுத்தகட்ட கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில், உயர் சிறப்புப் பிரிவு இடங்களில் 50 சதவீதம் பணி மருத்துவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, 151 இடங்கள் நிரப்பப் படாமல் இருந்தன.

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தனி ரிட் மனு தாக்கல் செய்திருந்த தமிழ்நாடு மருத்துவக் கழகம் (TNMOA), புதன்கிழமை (ஜூலை 29) அன்று ஒரு கடுமையான அறிக்கையை வெளியிட்டது. அதில், தற்போதைய நிலைமை முற்றிலும் மாநில அரசின் சட்ட மற்றும் நிர்வாகத் தோல்வியின் விளைவே என்று கூறியுள்ளது.

இது அரசு மருத்துவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியதை மட்டுமல்லாமல், தமிழகத்தின் பொது சுகாதார அமைப்பு மற்றும் எதிர்கால சூப்பர் ஸ்பெஷாலிட்டி சேவைகளைப் பாதுகாப்பதில் உள்ள கடுமையான அர்ப்பணிப்பின்மையையும் பிரதிபலிக் கிறது.

இல்லையெனில் பொது சுகாதாரத்தை வலுப்படுத்தி, தமிழக மக்களுக்கு மேம்பட்ட மருத்துவ சேவையை வழங்கியிருக்கக்கூடிய 151 எதிர்கால உயர் சிறப்பு மருத்துவர்களின் இழப்பு இது என சங்கம் கூறியது. மாநில அரசு "அவசரமாக" இரண்டாம் கட்ட கலந்தாய்வை நடத்தியதுடன், அகில இந்திய இரண்டாம் கட்ட கலந்தாய்வுக்கு முன்பே, சேவை மருத்துவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 151 இடங்கள் காலியாக இருப்பதாக அறிவித்தது.

"பணியில் இல்லாத மருத்துவர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கில், மாநில அரசு உரிய நேரத்தில் ஒரு மூத்த வழக்கறிஞரை நியமிக்கத் தவறியதுடன், கடைசி நேரத்தில் வழக்கறிஞரை நியமித்து, எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் வாதங்களைத் திறம்பட முன்வைக்கவும் தவறியது. மிக முக்கியமாக, அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், 151 இடங்கள் ஒப்படைக்கப்படும் என்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இதன் விளைவாக, எங்கள் இடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு (AIQ) மாற்றுமாறு மே 29 அன்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அரசியல் அழுத்தம் காரணமாக அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்ட போதிலும், அது வெறும் சம்பிரதாயமாகவே இருந்து, இதுவரை விசாரணைக்கு வரவில்லை," என்று அந்த சங்கம் கூறியது.

**சட்டமன்றத்தில் தீர்வு காணப்படாத கோரிக்கை!**

மாநிலத்தின் உயர் சிறப்புத் தகுதி இடங்கள் அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு (AIQ) விட்டுக்கொடுக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்காக, சட்டமன்றத்தில் ஒரு சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்று மாறு தமிழக அரசை தாங்கள் பலமுறை வலியுறுத்தியதாகவும், ஆனால், அந்த வேண்டுகோளின் மீதும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் TNMOAவின் பொதுச் செயலாளர் எம்.அகிலன் குறிப்பிட்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற விசாரணையின்போது நீதிபதி பி.வி. நாகரத்னா தெரிவித்த வாய்மொழிக் கருத்தை அது மேற்கோள் காட்டியது "தங்கள் அலுவல் பணிகளை ஒரே நேரத்தில் ஆற்றிவரும் அரசு மருத்துவர்கள், தங்கள் வீடுகளில் இருந்தபடியே நீட் தேர்வுக்குத் தயாராகும் தேர்வர்களுடன் எப்படிப் போட்டியிட முடியும்?" இந்த முக்கியமான நீதித்துறை கருத்து இருந்த போதிலும், செவ்வாய்க்கிழமை (ஜூலை 28) நடைபெற்ற விசாரணையின்போது, மாநில அரசால் இந்தக் கருத்தின் அடிப்படையில் வலுவான வாதங்களை உருவாக்கி முன்வைக்க முடியவில்லை என்று அது கூறியது.

TNMOA சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகியிருந்தார். தமிழக அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு மனுவில், மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வியை தமிழக அரசு நியமித்திருந்தது. அரசு மருத்துவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளைத் தொடர்ந்து, 151 இடங்கள் தொடர்பான முக்கிய விசாரணையில் ஆஜராவதற்காக மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் மனு சிங்வி மற்றும் பிரஷாந்த் ஆகியோரை நியமித்து சுகாதாரச் செயலாளர் உத்தரவிட்டிருந்தபோதிலும், "நேற்று மூத்த வழக்கறிஞர்கள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதன் விளைவாக, விசாரணையின் போது அமர்வின் கேள்விகளுக்குப் பதிலளிக்க மூத்த வழக்கறிஞரை நீதிமன்றம் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது," என்று TNMOA தெரிவித்தது.

மருத்துவ சேர்க்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், பணியில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஒரு தனி வழியை வழங்குவதற்கும் தமிழக அரசுக்கு உள்ள அதிகாரத்தை அங்கீகரித்து, பணியில் உள்ள அரசு மருத்துவர்களுக்கான 50% இட ஒதுக்கீட்டை உறுதிசெய்த இரண்டு முந்தைய தீர்ப்புகள் இருந்தபோதிலும், இந்த 151 இடங்கள் தமிழகத்தின் பிரத்தியேக மான பணியில் உள்ளவர்களுக்கான ஒதுக்கீடாகும் என்றும், அவற்றை சட்டப்படி அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு (AIQ) மாற்ற முடியாது என்றும் கூறும் அடிப்படை வாதத்தை நேற்றைய விசாரணையின் போது மாநில அரசு உறுதியாக முன்வைக்கத் தவறிவிட்டது என்று அது கூறியது.

---

### கலைஞர் பற்றியோ, காவிரி பற்றியோ பேச

# அரைவேக்காட்டு அமைச்சருக்குத் தகுதி கிடையாது!

### முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!


**சென்னை, ஆக 1 -**

**"கலைஞர் பற்றியோ, காவிரி பற்றியோ பேச அரைவேக்காட்டு அமைச்ச ருக்கு எந்தவித தகுதியும் கிடையாது" என்று முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

தமிழக எதிர்க்கட்சித் தலைவரை நோக்கி, உங்கள் தந்தை, உங்கள் தாத்தா காவேரி நீர் பெற என்ன செய்தார்கள் என்று கேட்கும் அரைவேக்காடு அமைச்சரே ! நீங்கள் 9 வயது சின்ன பையனாக இருந்த போது 1990 ஜூன் 2ல் காவேரி தீர்ப்பாயம் அமைத்தவர் கலைஞர்.

பக்ரா நங்கல் நதிநீர் வாரியம் போல், காவேரி நதிநீர் வாரியத்தையும் (*kaveri water management board*) அமைக்க 2018 பிப்ரவரி 16 தேதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த போது, பா.ஜ.க. அரசு உச்ச நீதிமன்ற தீர்ப்பை மாற்றி காவேரி மேலாண்மை



ஆணையம் (*kaveri water management authority*) என்று அமைக்க கர்நாடகாவுக்கு ஆதரவாகவும் தமிழகத்திற்கு விரோதமாகவும் பா.ஜ.க. துரோகம் செய்த போது RSS இயக்கத்தில் இருந்த நீங்கள் கலைஞர் பற்றியோ காவேரி உரிமை பற்றியோ பேச எந்த தகுதியும் உரிமையும் இல்லை.

பா.ஜ.க. ஆட்சிக்கும் உங்கள் ஆட்சிக்கும் பாலமாக இருந்து உங்கள் ஆட்சியை தாங்கி பிடிக்கும் டெல்லி பிரதிநிதி பெங்களூர் வெங்கட் நாராயணா, தனிச் செயலர் ஆந்திர விஷ்ணு ரெட்டி, நீர்வளத்துறை அமைச்சர் பாண்டிச்சேரி புஸ்ஸி ஆனந்த் உட்பட நீங்கள் நால்வரும் காவேரி பிரச்சினையையும், தமிழக மக்களையும் மறந்து, காவேரி மேகதாது படம் தயாரித்து கர்நாடகாவில் ஓட்டுவதற்கு ஒத்திகை பார்த்து கொண்டிருக்கிறீர்களா CM sir ?

"ஜனநாயகன்" பட ரிலீஸ்க்கு முன் கர்நாடகம் சென்று உங்கள் ரசிகர்களை உற்சாகமூட்டிய முதலமைச்சரே! தற்போது முடங்கிக் கிடக்கும் படத்தை ஓட்டுவதற்காக மீண்டும் கர்நாடகம் செல்ல துடிக்கிறீர்களா CM Sir ?

தமிழக உரிமைகளை தொடர்ந்து ஒன்றிய அரசிடம் பறிகொடுத்து வரும் உங்கள் முதுகெலும்பில்லா ஆட்சி தமிழ்நாட்டில் தொடர வேண்டுமா CM sir ?

இவ்வாறு மு.அப்பாவு தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

---

### மேகதாது திட்டத்தில் த.வெ.க. அரசிடம் உறுதியான நிலைப்பாடு இல்லை!

# தமிழ்நாட்டின் காவிரி உரிமை குறித்து ஒன்றிய அரசின் பதில் என்ன?

### மக்களவையில் — ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக 1-

மேகதாது திட்டத்தில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறிய தவெக அரசு; தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமை குறித்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசிடமிருந்து நேரடி பதில் இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே முன்மொழிந்துள்ள மேகதாது அணைத் திட்டம் தொடர்பாக ஏதேனும் முன்மொழிவை ஒன்றிய அரசு பெற்றுள்ளதா, அதன் தற்போதைய நிலை என்ன என்பதைக் குறித்து ஒன்றிய ஜல் சக்தி அமைச்சரிடம் விளக்கம் கோரினார். மேலும், காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, தமிழ்நாடு



அரசின் ஒப்புதல் மற்றும் ஒன்றிய அரசின் அனுமதி இன்றி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படு கிறதா என்பதையும் கேட்டறிந்தார். அதோடு, மேகதாது திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட எந்தவித அனுமதியும் வழங்கக்கூடாது என்றும், விரிவான திட்ட அறிக்கையை (DPR) மத்திய நீர்வள ஆணையம் பரிசீலிக்கக் கூடாது என்றும் தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலித்துள்ளதா, திட்டத்தால் காவிரி படுகை பகுதிகளில் பாசனம், வேளாண்மை மற்றும் குடிநீர் கிடைப்பதில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விவசாயிகள் அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள், காவிரி படுகை விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் தமிழ்நாட்டின் சட்டபூர்வமான காவிரி நீர் பங்கினைப் பாதுகாக்கவும், பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் கோரினார்.

இதற்கு ஜல் சக்தி அமைச்சகம் அளித்த பதில் வருமாறு:

(அ) கர்நாடக அரசு 2019ஆம் ஆண்டு சமர்ப்பித்த மேகதாது சமநிலை நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை (DPR), காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் (CWDT) தீர்ப்புக்கும், தற்போதைய மத்திய நீர்வள ஆணையத்தின் (CWC) வழிகாட்டுதல்களுக்கும் ஏற்ப திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு கோரி, திட்ட அதிகாரிகளிடம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) முதல் (ஈ) வரை: காவிரி நீர் வழக்கு தொடர்பாக 16.02.2018 அன்று வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவிரி ஆற்றின் குறுக்கே எந்தவொரு கட்டுமானத்தையும் மேற்கொள்வதற்கு கர்நாடக அரசு, தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய கீழ்நிலை மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற எந்தவித நிபந்தனையும் இல்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் (CWDT) தீர்ப்பில் இடம்பெற்றுள்ள Clause XVIIIஐ உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலமும் தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு முரணாக இல்லாத வகையில், தங்கள் மாநில எல்லைக்குள் உள்ள நீரை ஒழுங்குபடுத்தவும் பயன்படுத்தவும் உரிமை கொண்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், மேகதாது திட்டத்தால் காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களின் குடிநீர் கிடைப்பில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தை வெளிப்படுத்தி தமிழ்நாடும், விவசாயிகள் அமைப்புகளும் அளித்துள்ள மனுக்களை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துள்ளதாகவும் எந்தத் திட்டம் தொடர்பாகவும் பெறப்படும் மனுக்கள், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் படி திட்ட மதிப்பீட்டின் போது பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(உ) மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறு சட்டம், 1956ன் பிரிவு 6Aன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், ஒன்றிய அரசு 01.06.2018 அன்று காவிரி நீர் மேலாண்மைத் திட்டத்தை (Cauvery Water Management Scheme CWMS) அரசிதழில் அறிவித்துள்ளது. இதன் மூலம், உச்ச நீதிமன்றம் 16.02.2018 அன்று மாற்றியமைத்த காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் நோக்கில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் காவிரி நீர் ஒழுங்குமுறை குழு (CWRC) அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.




கோவை மாநகராட்சி ஆர்.எஸ். புரம் கலையரங்கத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ சேவை முகாமை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இதில் சுகாதார குழுத்தலைவர் பெ.மாரிசெல்வன், மண்டலகுழுத் தலைவர்கள் லட்சுமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), கதிர்வேல் (வடக்கு), நகர்நல அலுவலர் சுபாஷ் காந்தி, மண்டல சுகாதார அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், ஆண்டியப்பன், குணசேகரன், ராஜேந்திரன் சுகாதார ஆய்வாளர்கள் லோகநாதன், விஜயகுமார், உதவி பொறியாளர் மஞ்சுளா தேவி உள்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.

---

## இதே நாளில் அன்று இனி எந்நாளோ..?

**( முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிகிச்சைக்காக காவிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 28.7.2018 நாளையொட்டி எழுதப்பட்ட கவிதை )**



"என் உயிரினும் மேலான
அன்பு உடன்பிறப்புக்களே"
எனும் காந்தக் குரலை
இனி நாம் கேட்பது எந்நாளோ..?

அரசியல் மேடைகளை
கவியரங்கங்களாய் மாற்றிய
தாய்த் தமிழை தினந்தோறும்
அரியாசனம் ஏற்றிய
என் வித்தக தலைவரே
உன் மேடை பேச்சை
நாளைய என் தலைமுறை
கேட்பது தான் இனி எந்நாளோ..?

அரசியல் தலைவர் என்பதை தாண்டியும்
கொள்கை வேந்தாய், குனக்குன்றாய்,
தலைவரை மதிக்கும் பண்பட்டவராய்,
தன்னை போற்றும் தொண்டர்களை
மதிக்கும் பக்குவப்பட்டவராய்;

பேச்சாளராய், எழுத்தாளராய்,
நகைச்சுவை ததும்பும் நாவலராய்
மக்களது தேவையறிந்து
ஆளுகை செய்த காவலராய்
இனி நான் உமை காணும் நாள்
எந்நாளோ..?

மானம்
நான் கேட்ட தாலாட்டு
மரணம்
நான் ஆடுகின்ற விளையாட்டு என்று
திருவாய் மலர்ந்தாய் அன்று;

அஞ்சுகத்தம்மாள் வயிற்றில்
கருவாய் பூத்த பூ மலரே, பொன் நிறமே,
புன்னகை பூபாகமே
உன் விடியலே தென்னகத்து பூபாளமே..

உலகத் தமிழனின் இதய சிம்மாசனமே,
உன்னை நேரிலோ இல்லை
கேமரா வழியிலோ மீண்டும்
நாங்கள் காணும் நாள் எந்நாளோ..?
சிரத்திலோ நடுவாங்கு எடுத்து
கரத்திலோ எழுதுகோல் தொடுத்து
கவி எழுதும் உன் ஒளிப்பேழை (வீடியோ)
எல்லாம் எங்களது விழித்திரையில்
எழில்மிகு பிம்பமாய்
காட்சியானதெல்லாம் இனி மறுமுறை
நாங்கள் காணுவது எந்நாளோ...?

காஞ்சித் தலைவனாம்,
தென்னாட்டு காந்தியாம்
பேரறிஞர் அண்ணாவிற்கு
நீ எழுதிய இரங்கல் பா
பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில்
இருந்ததெல்லாம் வரலாற்று சேதி
உன்னை விட்டால் அது போன்ற
கவிக்கும் இந்தப் புவிக்கும் யார் நாதி..?

அவையாவும் செவி வழிச்
செய்தியாகும் போது எனது மனந்தனில்
உன் போன்ற தலைவனை
மீண்டும் நாங்கள் காண்பது எந்நாளோ..?

வீழ்ந்து விடாமல்
விழுந்து விடாமல்
எழுந்து வா..
எங்களுக்கெல்லாம்
எழுச்சி தந்த உனக்கு
வீழ்ச்சி இல்லை
இந்நாளும்.. எந்நாளும்..

**அ.சேக் அப்துல்லா**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

## ஆகஸ்ட் 1 (2000)



**பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.**

**கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் 'நாவுக்கரசர்' என அழைக்கப்பட்டவர்.**

**கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.**

**"என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.